நியூ சவுத் வேல்ஸ் தமிழ்ப் பாடசாலைகள் கூட்டமைப்பு
**NSW Federation of Tamil Schools Inc.**

# கலாநிதி வேந்தனார் இளங்கோ ஞாபகார்த்த தமிழ்ப் புலமைச் சான்றிதழ்ப் பரீட்சை

# Dr Venthanar Ilango Memorial Tamil Proficiency Examination

## தரம் : இடைநிலை – மேற்பிரிவு

## Level : Intermediate - Upper

***June 2012***

வினாக்கள் : 55

வழங்கப்படும் நேரம் : 65 நிமிடங்கள்

(வாசிப்பதற்கான நேரம் : 10 நிமிடங்கள் உட்பட)

உங்கள் பதில்களைத் தரப்பட்ட விடைத்தாளில் குறியிடுக.

**பின்வரும் உரைப்பகுதியை வாசித்து 1 முதல் 10 வரையுள்ள வினாக்களுக்கு மிகச்சரியான அல்லது மிகப்பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

## ஈழமும் தமிழ் இலக்கணமும்

தமிழ் மொழியின் முன்னேற்றத்திற்கு இன்றியமையாத பல துறைகளில் ஈழநாட்டுப் பெரியார் தமிழ் நாட்டவருக்கு வழி காட்டியாயிருக்கின்றனர். தமிழ் நாடு தமிழின் உயர்வினை மறந்த காலங்களில் அதனை நினைவூட்ட ஈழத்திலிருந்து அறிஞர் தோன்றினர். இவர்களுட் பலர் புதிய இலக்கண நூல்கள் எழுதியும் பழைய இலக்கண நூல்களைப் பதிப்பித்தும் சிறந்த தொண்டாற்றினர்.

ஒரு மொழிக்குச் சிறப்புக் கொடுப்பது இலக்கணம். இலக்கணம் இல்லாதவிடத்து மொழி சிதைந்து அழகு குன்றிச் சீர்கெட்டு விடும். பத்தொன்பதாம் நூற்றாண்டிலே வாழ்ந்த ஈழத்துப் பேரறிஞர் பலர் தமிழ் மொழி சீர்குலையாமல் இருப்பதற்குத் தமிழ் இலக்கண நூல்கள் சிலவற்றை அச்சுவாகனம் ஏற்றி பணிபுரிந்தனர். அவர்களிலே தலைசிறந்தவர் சி.வை. தாமோதரம் பிள்ளை. இதுவரை எவரும் எட்டிப் பாராத துறையிற் பணியாற்ற முன்வந்தார். தமிழ் மொழியில் இன்று கிடைத்துள்ள மிகப் பழைய இலக்கண நூல் தொல்காப்பியம் ஆகும். இந்நூல் முழுவதையும் முதன்முதலாகப் பதிப்பித்த தனிச் சிறப்பு இவருக்கே உரியது ஆகும்.

இதே போன்று யாழ்ப்பாணத்து நல்லூர் ஆறுமுகநாவலர் தொல்காப்பியம் முதலிய பல இலக்கண நூல்களைப் பதிப்பித்தார். நாவலர் பதிப்பு என்றால் நல்ல பதிப்பு என்ற பெருமை இவர் பதிப்பித்த இலக்கண நூல்களுக்குமுண்டு.

திருக்கோணமலையைச் சேர்ந்த தி.த.கனகசுந்தரம் பிள்ளை ,சுன்னாகம் குமாரசாமிப் புலவர், உடுப்பிட்டி சிவசம்புப் புலவர், சங்குவேலி சிதம்பரப் பிள்ளை (வில்லியம் நெவின்ஸ்), சுவாமி ஞானப்பிரகாசர் என்று பலர் தமிழ் இலக்கண நூல்களைப் பரிசோதித்துப் பதிப்பதோடு நில்லாது பல இலக்கண நூல்களும் எழுதினர்.

தொல்காப்பியம் முழுவதற்கும் சிறந்த உரைவிளக்கம் எழுதியவர் மகாவித்துவான் சி.கணேசையர் அவர்கள். தொல்காப்பியம் முழுவதையும் அச்சுவாகனம் ஏற்றிய பெருமை சி.வை. தாமோதரம் பிள்ளை அவர்களையே சாரும். அவரைப் பின்பற்றி உரை விளக்கக் குறிப்புடன் தொல்காப்பியம் முழுவதையும் சிறந்த முறையில் அச்சிட்டு வெளியிட்டவர் சி.கணேசையர் அவர்கள். இவரது இலக்கண ஆராய்ச்சிக் கட்டுரைகள் யாவும் “செந்தமிழ்ச் சஞ்சிகை”யில் வெளிவந்தன.

இவ்வாறு தமிழ் மொழி இலக்கண மரபை பாதுகாத்து வந்தனர்.

அடுத்த பக்கத்தில் தொடரும்.

1. ஒரு மொழிக்கு சிறப்புக் கொடுப்பது?

a) இலக்கியம்
b) இலக்கணம்
c) எழுத்து
d) இவை யாவும் தவறு.

2. எந்த நூற்றாண்டில் தமிழ்மொழி இலக்கணத்தினை பாதுகாக்கும் முயற்சிகள் தொடங்கப்பட்டது?

a) பத்தொன்பதாம் நூற்றாண்டு
b) பதினெட்டாம் நூற்றாண்டு
c) பதின்மூன்றாம் நூற்றாண்டு
d) இவை யாவும் சரி.

3. மிகப்பழைய தமிழ் இலக்கண நூல் எது?

a) சிலப்பதிகாரம்.
b) திருக்குறள்
c) நாலடியார்
d) தொல்காப்பியம்

4. தொல்காப்பியம் முழுவதையும் முதன்முதலாகப் பதிப்பித்தவர் யார்?

a) சி. வை. தாமோதரம்பிள்ளை
b) நாவலர்
c) சி. கணேசையர்
d) குமாரசாமிப்புலவர்

5. தொல்காப்பியம் முழுவதற்கும்: சிறந்த உரை விளக்கம் எழுதியவர் யார்?

a) நாவலர்
b) சி. வை. தாமோதரம்பிள்ளை
c) சி. கணேசையர்
d) சிதம்பரப்பிள்ளை

அடுத்த பக்கத்தில் தொடரும்.

6. சிவசம்புப் புலவர் எந்த ஊரில் பிறந்தார்?

a) சுன்னாகம்
b) சங்குவேலி
c) நல்லூர்
d) உடுப்பிட்டி

7. யாருடைய பதிப்பு "நல்ல பதிப்பு" என்ற பெருமை பெற்றது?

a) சி.கணேசையர்
b) நாவலர்
c) சுவாமி ஞானப்பிரகாசர்
d) தாமோதரம்பிள்ளை

8. சி. வை. தாமோதரம்பிள்ளை அவர்கள் எந்த நூற்றாண்டில் வாழ்ந்தார்?

a) பதினெட்டாம் நூற்றாண்டு
b) பத்தொன்பதாம் நூற்றாண்டு
c) இருபதாம் நூற்றாண்டு
d) இவை எதுவும் சரியல்ல.

9. "செந்தமிழ்ச் சஞ்சிகை"யில் யாருடைய ஆக்கங்கள் வெளிவந்தன

a) நாவலர்
b) கணேசையர்
c) ஞானப்பிரகாசர்
d) யாவும் தவறு.

10. பரிசோதித்துப் பதிப்பித்தல் என்பதனை விளக்கும் பொருத்தமான கூற்று எது?

a) திருத்தமின்றிஅச்சுவாகனம் ஏற்றுதல்.
b) பிழைகளைத் தவிற்காது அப்படியே பதிப்பித்தல்.
c) அச்சுவாகனம் ஏற்றுதல்.
d) சரி பார்த்து அதன் பின் அச்சுவாகனம் ஏற்றுதல்.

அடுத்த பக்கத்தில் தொடரும்.

**வினாக்கள்: 11 - 15**

**பின்வரும் பாடலினை வாசித்து அதன் கீழ் காணப்படும் வினாக்களுக்கு மிகச்சரியான விடையைத் தெரிவு செய்க.**

சிறு நண்டு மணல்மீது படமொன்று கீறும்
சில வேளை இதை வந்து கடல் கொண்டு போகும்
கறி சோறு பொதியோடு தருகின்ற போதும்
கடல் மீதில் இவள் கொண்ட பயம் ஒன்று காணும்.

ஏலை ஏலோ
தத்தையா ஏலை ஏலோ

வெறுவான வெளிமீது மழை வந்து சீறும்
வெறி கொண்ட புயல் நின்று கரகங்கள் ஆடும்
நெறி மாறு படநூறு சுழி வந்து சூழும்
நிலையான தரை நீரில் இலை போல் ஈடாடும்.

கோடை கொடும் பனி மழைக்குளிரை அஞ்சிக்
கோடிப் புறத்தினில் உறங்கி விடலாமோ
ஆடை களைந்து தலை மீதினில் அணிந்தோம்
ஆழக் கடல் தயிர் எனக் கடைய வந்தோம்.

வாடை குளிர்ந்த தெனில் வாடி விடலாமோ
வாரும் கடல் முழுவதும் ஓடி வலை வீச
பாடொன் றிரண்டகல முன் பகலும் ஆகும்
பாரும் கிழக்கிலொரு வெள்ளி ஒளி வீசும்.

*மஹாகவி*
*"புதிய தொரு வீடு" நாடகம்*

11. "சிறு நண்டு மணல்மீது படமொன்று கீறும் சில வேளை இதை வந்து கடல் கொண்டு போகும்" என்பதில் கவிஞர் கூற வருவது யாது?

a) நிலையற்ற வாழ்கை
b) மகிழ்ச்சி
c) துயரம்
d) எதிர் பார்ப்பு

12. கடலும் கடல் சார்ந்த பிரதேசமும் எப்படி அழைக்கப்படுகிறது?

a) குறிஞ்சி
b) நெய்தல்
c) பாலை
d) முல்லை

அடுத்த பக்கத்தில் தொடரும்.

13. இப்பாடலுக்குப் பொருத்தமான தலைப்பு எது?

a) கடலை நம்பி
b) ஆழக்கடல்
c) செய்யும தொழில்
d) யாவும் சரி

14. கறி சோறு பொதியோடு தருகின்ற பெண்ணின் மனநிலை யாது?

a) துயரம்
b) மகிழ்ச்சி
c) ஆரவாரம்
d) இவை எல்லாமே பிழை

15. கடற்கரை மக்களது எதிர்கால நம்பிக்கையினை வெளிப்படுத்த நிற்கும் பாடல் வரி யாது?

a) நிலையான தரை நீரில் இலை போல் ஈடாடும்
b) கிழக்கிலொரு வெள்ளி ஒளி வீசும்
c) இவை இரண்டும்
d) தயிர் எனக் கடைய வந்தோம்

**வினாக்கள்: 16 - 20**
**பின்வரும் வாக்கியத்தில் தவறாக எழுதப்பட்ட சொல் எது?**

16. உலகில் தேனீர் பலரால் விரும்பி அருந்தப்படும் ஒரு பானம் ஆகும்.

a) பானம்
b) தேனீர்
c) அருந்தப்படும்
d) விரும்பி

17. அவன் வாளைப்பழ தோல் சறுக்கி சாலையில் விழுந்தான்.

a) வாளைப்பழ
b) சறுக்கி
c) சாலையில்
d) விழுந்தான்

18. நாம் ஒன்று கூடி ஒற்றுமையாக வாள்வதே சிறந்த மனிதப்பண்பாகும்.

a) ஒற்றுமையாக
b) வாள்வதே
c) சிறந்த
d) மனிதப்பண்பு

19. தாய்ப்பறவை நெடுந்துாரத்திலிருந்து இறை கொண்டு வந்தது.

a) இறை
b) பறவை
c) நெடுந்துாரத்திலிருந்து
d) யாவும் பிழை.

**வினாக்கள்: 20 - 24**
**பின்வரும் வாக்கியங்களில் விடுபட்ட சொற்களைத் தெரிவு செய்க.**

20. "பாட்டி வைத்த ____________________ பாங்காய்ப் பழங்கள் தருகிறது.

a) வாலை மரம்
b) வாளை மரம்
c) வாழை மரம்
d) வழை மரம்

21. சீறிக் காற்றும் எழுந்தது வானம் திறந்து மழை ____________________.

a) பொழிந்தது
b) பொலிந்தது
c) பொளிந்தது
d) பெழிந்தது

22. வசந்தம் வீசுகின்ற பருவம் ____________________ காலம் ஆகும்.

a) இளமைக்
b) இலமைக்
c) இழமைக்
d) இளைமைக்

23. பரீட்சைப் பெறுபேறுகள் ____________________ வெளிவருவதற்குக் கணனி துணை புரிகின்றது.

a) துரிதமாக
b) துறிதமாக
c) துல்லியமாக
d) துரிதமாகவே

24. நாம் ____________________ அன்பாகப் பழக வேண்டும்.

a) எள்லோரிடமும்
b) எல்லாரிடமும்
c) எல்லாரும்
d) எல்லோரிடமும்

**வினாக்கள்: 25 - 27**
**பின்வரும் கூற்றுக்களுக்குப் பொருத்தமான பழமொழிகளை தெரிவு செய்க.**

a) மின்னுவதெல்லாம் பொன் அல்ல.
b) அகத்தின் அழகு முகத்தில் தெரியும்.
c) ஆற்றிலே போட்டாலும் அளந்து போடு.
d) நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்.

25. அளவு தெரியாமல் செலவு செய்யக் கூடாது.

26. வெளித் தோற்றத்தை நம்பி ஏமாறக் கூடாது.

27. ஒருவரின் மனத்தில் உள்ளவற்றை அவரின் முகத்தைப் பார்த்தே அறிந்து கொள்ளலாம்.

**வினாக்கள்: 28 - 29**
**பின்வரும் வினாக்களுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.**

a) புரட்சிக்கவி பாரதிதாசன்
b) மகாகவி பாரதியார்
c) திருவள்ளுவர்
d) நவாலியூர் சோமசுந்தரப்புலவர்

28. வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி வாழிய வாழிய வே!

29. தமிழுக்கு அமுதென்று பேர் - அந்தத் தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்!

அடுத்த பக்கத்தில் தொடரும்.

**வினாக்கள்: 30 - 34**
**பின்வரும் இலக்கியப் பாத்திர படைப்புகளைத் தொடர்புபடுத்துக.**

| |
|---|
| a) சிலப்பதிகாரம் |
| b) மகாபாரதம் |
| c) நளவெண்பா |
| d) இராமாயணம் |

30. மாதவி

31. வாலி

32. கோவலன்

33. மண்டோதரி

34. தமயந்தி

**வினாக்கள்: 35 - 37**
**பின்வரும் சொல் தொகுதியில் வேறுபட்ட சொல்லைத் தெரிவு செய்க.**

| | | | | |
|---|---|---|---|---|
| 35. | a) மதி | b) சந்திரன் | c) நிதி | d) வெண்ணிலா |
| 36. | a) பகலவன் | b) ஞாயிறு | c) ஆதவன் | d) கடவுள் |
| 37. | a) பங்குனி | b) வெள்ளி | c) ஆனி | d) ஐப்பசி |

**வினாக்கள்: 38 - 39**
**பின்வரும் ஆங்கிலச் சொற்களுக்குப் பொருத்தமான தமிழ்ச் சொற்களைத் தெரிவு செய்க.**

| |
|---|
| a) இறுவட்டு |
| b) தரவிறக்கம் / பதிவிறக்கம் |

38. download

39. CD

**வினாக்கள்: 40 - 42: பின்வரும் இரட்டைக் கிளவிகளைப் பொருத்தமான இடங்களில் தெரிவு செய்க.**

| |
|---|
| a) மட மட |
| b) பட பட |
| c) குடு குடு |
| d) சல சல |

40. அடர்ந்த காட்டின் நடுவில் நின்றபோது மனம் __________________ என்று அடித்தது.

41. ஔவைப் பாட்டி தனி வழியே ________________________ என்று நடந்து சென்றாள்.

42. கடும் மழையினால் வெள்ளம் சாலை வழியாக____________________ என்று ஓடியது.

**வினாக்கள்: 43 - 45: பின்வரும் வினாக்களுக்கு பொருத்தமான விடையினைத் தெரிவு செய்து குறித்த எண்ணிற்கு எதிரே எழுதவும்.**

| | | |
|---|---|---|
| சங்க காலம் | சிலப்பதிகாரம், மணிமேகலை | வள்ளுவன் |
| பாரதி | சங்கம் மருவிய காலம் | பூங்குன்றனார் |
| கம்பன் | சிலப்பதிகாரம், இராமாயணம் | அகம், புறம் |

43. “யாதும் ஊரே யாவரும் கேளிர்” என்று பாடிய சங்கப்புலவர் யார்?

44. தமிழில் இரட்டைக் காப்பியங்கள் எவை?

45. முச்சங்கங்கள் அமைத்து தமிழ் வளர்க்கப்பட்ட காலம் எது?

**சொற்திறன் வினாக்கள்: 46 – 55**

**பின்வரும் உரைப்பகுதியில் கீறிட்ட இடத்திற்குப் பொருத்தமான சொல்லை விடைத்தாளில் குறித்த எண்ணிற்கு எதிரே எழுதுக.**

## <u>அன்னையர் தினம்</u>

இன்று பல நாடுகளில் அன்னையர் தினம் (46)_________________________ வருகிறது. முன்பு தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியும், அதன் தொடர்புகளும் அரிதாகக் காணப்பட்டபோது இத்தினம் பற்றி தென் ஆசிய நாடுகளில் அதிகம் அறிமுகம் (47)________________________. தற்போது கணனியின் வருகையும், அதனைத் தொடர்ந்து இணையத்தளத்தின் வாயிலாக மேலைத்தேய நாடுகளில் மக்கள் எவ்வாறு அன்னையர் தினத்தினை ஆரவாரத்துடன் கொண்டாடி வருகின்றனர் என்பதையும் யாவரும் (48)__________________________ முடிகிறது.

தமிழ் மக்கள் மத்தியில் அன்னை என்பவள் தினமும் போற்றப்படுகின்ற தெய்வமாவாள். அன்னையும் பிதாவும் (49)____________________________ தெய்வங்களாக உயர்ந்த நிலையில் வணங்கத் தக்கவர்கள். அவர்களது வயது முதிர்ந்த காலங்களில் நிழல் கொடுத்து (50)______________________________________ ஒவ்வொரு பிள்ளைகளினதும் கடமையாகும்.

புலம் பெயர்ந்த நாடுகளில் வாழ்கின்ற தமிழ்ப் (51)__________________________ தம் பிள்ளைகளுக்கு முன்மாதிரியாக விளங்க வேண்டும். இதனைப் பின்பற்றி இங்குள்ள பிள்ளைகளும் எமது பண்பாட்டினைக் (52)____________________________________. எவ்வாறாயினும் இங்கு வளர்கின்ற இளைய தலைமுறையினர் இந்நாட்டு மக்களுடன் (53)___________________________________ அன்னையர் தினத்தினை கொண்டாடி பெற்ற தாயினை மகிழ்விப்பதில் தவறில்லை. பல்கலாசார (54)______________________________ வாழ்ந்து வருகின்ற நாம் மற்றய இனமக்களின் மிக நல்ல விடயங்களை உள்வாங்குவதும் எமக்குரிய (55)_____________________________ பண்பாடாகும் எனக் கூறிக் கொள்ளலாம்.

Blank Page